# News Release

# வாகன் நகரின் கனடா நாள் விழா மறக்க முடியாத ஒன்றாக அமைந்தது!

**வாகன், ஒன்டாறியோ (ஜூலை 2, 2025)** – ஜூலை 1 அன்று, வடக்கு மேப்பிள் பிராந்திய பூங்காவில் (11085 Keele St.) நகரவாசிகளும் பார்வையாளர்களும் ஒன்று கூடி, கனடாவின் 158வது பிறந்த நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடி, முழு நாளும் இலவச பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், விளையாட்டுகள் மற்றும் வேடிக்கைகளை அனுபவித்தனர்.

“நமது மகத்தான நாட்டைக் கொண்டாடுவதற்கு இனிமையான இசையும், சுவைமிக்க உணவும், நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் அண்டை வீட்டார்களுடன் பகிர்ந்த மகிழ்ச்சியான சிரிப்புகளும் இணைந்தால் அதைவிடச் சிறந்த வழி வேறெதுவும் இருக்க முடியாது,” என்று மேயர் ஸ்டீவன் டெல் டுகா கூறினார்.

“ஒவ்வொரு ஆண்டும் கனடா நாளன்று நீங்கள் அனைவரும் ஒரு பெரிய சமூகமாக ஒன்று சேரும் அந்தக் காட்சியைக் காண்பது உண்மையிலேயே ஒரு சிறப்பான அனுபவமாகும். இந்த வருடாந்திர விழா, ஈடுபாட்டுடனும், படைப்பாற்றலுடனும், பண்பாட்டுப் பன்மைமிக்கும் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான வாகன் நகரத்தின் முயற்சிகளில் ஒன்றாகும். மற்றொரு வெற்றிகரமான நிகழ்வை அமைத்ததற்காகக் பொழுதுபோக்குச் சேவைகள் துறைa@a3க்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கோடைக்காலம் முழுவதும் வாகனில் நடைபெறும் இன்னும் பல சுவாரஸ்யமான நிகழ்வுகளில், நகரவாசிகளும், பார்வையாளர்களும் தொடர்ந்து உற்சாகமாகக் கலந்துக்கொள்வார்கள் என நான் நம்புகிறேன்.”

இந்த ஆண்டின் கனடா நாள் விழாவில் மேயர் டெல் டுகா மற்றும் கவுன்சில் உறுப்பினர்களின் வாழ்த்துரை, கீஸ்ஸா வழங்கிய தொடக்க நிகழ்ச்சி, ஜூனோ விருது பெற்ற பிரெஸ்டன் பாப்லோவின் முக்கிய இசை நிகழ்ச்சி, பல்வேறு செயல்பாடுகள், பரிசளிப்புகள், உணவு டிரக்குகள் மற்றும் மேலும் பல சிறப்பம்சங்கள் இடம்பெற்றன.

-30-

# News Release

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca